# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 244/2018/பே

ஆணை நாள். 13 –05–2019

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

ஆணை.

சென்னை–4, மைலாப்பூர், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலையினைச் சேர்ந்த திரு.எம். ஆறுமுகநயினார் என்பவரது 21.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.244/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 2015–16–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்த விளம்பரங்களை தனது நிறுவனம் மூலம் விளம்பரம் செய்ததில் பட்டியல் எண். 103/2015–16 நாள். 11.06.2015–ன்படி தொகை ரூ. 28,464/– மேற்படி அதிராம்பட்டினம் பேரூராட்சி மூலம் தங்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்து விசாரணை கோரி முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

31.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

05.04.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 07.05.2019 அன்று ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணையிடப்பட்டது.

மேற்படி அழைப்பாணையின் அடிப்படையில் 07.05.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தி, தான் அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 10.11.2018 முதல் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பட்டியல் பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்பதால் மேற்படி நிறுவனத்தினை தன்னால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரிய பட்டியல் மற்றும் விளம்பர நகல் பெறப்பட்டதாகவும், மேற்படி பட்டியல் மேலொப்பம் பெறும் பொருட்டு தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், பட்டியல் மேலொப்பம் செய்து பெறப்பட்டவுடன் மேற்படி நிறுவனத்திற்கு உரிய தொகை வழங்கப்படும் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதுடன் முறையீட்டு மனுவிற்கான 03.05.2019 நாளிட்ட விளக்க அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை. அதற்கான விளக்கம் எதனையும் சமர்ப்பிக்கவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் 03.05.2019 நாளிட்ட விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டது. அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்படி பட்டியல் தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து மேலொப்பம் பெறப்பட்டவுடன் உரிய தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படுமென உறுதி செய்யப்பட்டுள்ளதால் அதனை பதிவு செய்து இம்முறைமன்ற நடுவ நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மே திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு. ஆ. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

2.செயல் அலுவலர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.